
பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 18 | வெள்ளிக்கிழமை | 31.05.2024 | அதிர்வு 304

## விக்கிக்கு பாலித நன்றி தெரிவிப்பு



"நாட்டின் பொருளாதாரத்தின் ஸ்திர நிலை கருதி பிரதான இரண்டு தேர்தல்களையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்தி வைக்கும் எனது 06

### இரு தேர்தல்களையும் ஒத்திவைக்கும் யோசனை:

# விமர்சனங்களுக்கு திங்கள் தக்க பதிலடி

### ஐ.தே.க. பொதுச்செயலர் பாலித அதிரடி அறிவிப்பு



"ஜனாதிபதித்தேர்தல்,நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்ற எனது கருத்து தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்துவரும் நபர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை உரிய பதிலடி கொடுப்பேன்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச்செயலாளர்பாலிதரங்கே பண்டார தெரிவித்தார். 06

## பாலிதவின் கருத்து முட்டாள்தனமானது! தேர்தல்களை ஒத்திவைக்க இடமளியோம்!!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

இரண்டு பிரதான தேர்தல்களையும் ஒத்திவைக்க நாம் ஒருபோதும் இடமளியோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், ஐ.தே.க. – மொட்டுக் கட்சிகளும் தோல்விப் பயத்தில் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் ஒத்திவைக்க முயற்சிக்கின்றன.

இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரின் கருத்து முட்டாள்தனமானது. அவரின் யோசனைக்கு நாட்டின் அரசமைப்பில் இடமேயில்லை.

அரசமைப்பின் பிரகாரம் 06



## ஜனநாயகம் தொடர்பில் எவரும் ஐ.தே.கவுக்குப் பாடமெடுக்காதீர்

### அக்கட்சியின் அமைப்பாளர் விளாசல்




"ஜனநாயகத்தின் தாயகமே ஐக்கிய தேசியக் கட்சிதான். எனவே, ஜனநாயகம் பற்றி எமது கட்சிக்கு எவரும் பாடம் எடுக்க வேண்டியதில்லை. அரசமைப்பின் பிரகாரம் உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும்."

–இவ்வாறுஜனாதிபதியின்கீழ்இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்று பேர் கொண்ட 06




தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் நேற்று சுமந்திரன் எம்.பியைத் தமது கொழும்பு இல்லத்துக்கு அழைத்து உரையாடியிருக்கின்றார்.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடக்கூடிய தென்னிலங்கைப் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுடன் ஏதேனும் உரையாடல்கள் நடத்தினீர்களா, அவை தொடர்பில் ஏதேனும் தகவல் உண்டா என்று கேட்டார் சம்பந்தன். அந்த விடயங்களை ஊன்றிக் கவனிக்கும்படி சுமந்திரனைக் கேட்டுக் கொண்டார் என்றும் தெரிகிறது.

இலங்கை தமிழரசு கட்சியின் 06

# நாட்டை நெருக்கடிக்குள் தள்ள விரும்புகின்றவர்கள்தான் பொருளாதாரப் பரிமாற்ற சட்ட மூலத்தை எதிர்க்கின்றனர்

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



"நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள வேண்டிய தேவை உள்ள தரப்பினர்களுக்கே பொருளாதார மாற்ற சட்டமூலத்தை எதிர்க்க முடியும்."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொருளாதார மாற்ற சட்டமூலத்தின் ஊடாக உற்பத்தித் திறனை அதிகரித்து ஒவ்வொரு பிரஜைக்கும் சம வாய்ப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும். மேலும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைக்கொண்ட நாட்டை உருவாக்கவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று, பொருளாதார வளர்ச்சிக்கு இணைந்த வகையில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன், புத்தாக்கத்துடன் கூடிய ஏற்றுமதி விரிவாக்கப்பட்ட போட்டிச் சந்தையை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்த சட்டமூலம் பற்றி அறியாதவர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள வேண்டிய தேவை உள்ள தரப்பினர்களால் மாத்திரமே பொருளாதார மாற்ற சட்டமூலத்தை எதிர்க்க முடியும். இந்தச் சட்ட மூலத்தில் உள்ள இலக்குகளை அடைய முடியாது என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் சாதகமான இலக்கைக் கொண்டிருந்தாலும் ஏனைய எதிர்க்கட்சிகள் அரசியல் நோகத்தை மாத்திரமே வைத்துள்ளன.

மேலும், நமது நாட்டில் இலக்குமயப்பட்ட சட்டக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படாமையே, பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை. அதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன், 2022 ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் 128 வீதமாக இருந்த நாட்டின் கடன் சுமையை 2032 ஆம் ஆண்டுக்குள் 95 வீதமாக குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக நாம் செயற்பட வேண்டும். மேலும் 2022 இல் அரசாங்கத்தின் மொத்த பண விநியோகம் 34.6 வீதமாக இருந்தது.

அது, 2032 ஆம் ஆண்டாகும்போது 13 வீதமாக குறைக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் சேவை 2022 இல் 9.6 வீதமாக இருந்தது. 2027 இற்குள் அது 4.5 வீதமாக குறைக்கப்பட வேண்டும். இந்த இலக்குகளை இந்த நாட்டின் சட்டக் கட்டமைப்பாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதன் மூலம் நாட்டில் நிலைபேறான பொருளாதாரம் உருவாகும்.

மேலும், 2022 ஆம் ஆண்டில், நாட்டின் பொருளாதாரம் மறை 7.8 சதவீதமாக இருந்தது. ஆனால் இந்த சட்ட மூலத்தின் மூலம் 2027 ஆம் ஆண்டுக்குப் பிறகு பொருளாதார வளர்ச்சி விகிதம் 5மூ சதவீதத்தை தாண்டிச் செல்லும். வேலையின்மை 2022 இல் 4.7மூ ஆக இருந்தது. இது 2025 ஆம் ஆண்டளவில் 5மூ க்கும் குறைவாக பேணப்படும்.

மேலும், 2022 ஆம் ஆண்டு, பெண்கள் தொழிற்படையில் இணையும் எண்ணிக்கை 32.1 வீதமாக இருந்தது. 2030 ஆம் ஆண்டாகும்போது 40 வீதத்துக்கும் குறையாத எண்ணிக்கையினால் அதிகரிப்பதும் 2040 இல் 50 வீதம் வரை அதனை உயர்த்துவதும் எமது இலக்காகும்.

மேலும், நடைமுறைக் கணக்கு இருப்பு 2022ஆம் ஆண்டில் மறை 1.9 வீதமாக இருந்தது. 2025 ஆம் ஆண்டாகும்போது அதனை 1 வீதமாக பேணலாம். 2022 இல் 21 வீதமாக இருந்த பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி, 2025 இல் 40 வீதமாகவும், 2040 ஆம் ஆண்டாகும்போது 60 வீதம் வரை அதிகரிப்பது பொருளாதார பரிமாற்றம் சட்ட மூலத்தின் மூலம் இடம்பெறும்.

2022 இல் 1.6 வீதமாக இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2030 ஆம் ஆண்டாகும்போது, குறைந்த பட்சம் 5 வீதம் அளவில் பேண எதிர்பார்க்கப்படுகிறது. நேரடி முதலீட்டின் அளவை நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியில் 2030 ஆம் ஆண்டாகும்போது 40 வீதம் வரை மாற்றுவதே எமது இலக்காகும்.

அதேபோன்று, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பொருளாதார நிலைப்படுத்தல் வேலைத்திட்டத்தில் முக்கிய காரணி நமது நாட்டின் முதன்மை இருப்பு ஆகும். 2022 ஆம் ஆண்டளவில் மறை 3.7 வீதமாக காணப்பட்ட முதன்மை இருப்பை 2025 ஆம் ஆண்டளவில் நேர் 2.3 வீதமாக மாற்றி, 2032 ஆம் ஆண்டுக்கு அப்பால் அதனை 2 வீதமாக பேணவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், 2022 ஆம் ஆண்டில் அரச வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3 வீதமாக இருந்தது. 2025ஆம் ஆண்டுக்குள் அதை 15 வீதத்திற்கும் அதிகமாகப் பேணுவதே எமது இலக்கு. இதன் மூலம் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை தடையின்றி வழங்க முடியும்.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள மறுசீரமைப்புச் செயல்முறையால், ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த வறுமை நிலையை 2027 ஆம் ஆண்டுக்குள் 15 வீதத்துக்கு கீழேயும், 2035 ஆம் ஆண்டாகும்போது 10 வீதம் வரை கொண்டு வருவதே எமது குறிக்கோள்.

இந்தப் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தின்படி, உள்ள சட்டத்திற்கு உட்பட்ட இலக்குமயப்பட்ட வேலைத்திட்டத்திற்கு தேவையான மறுசீரமைப்புகள் மற்றும் வேலைத்திட்டங்களை செயல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளதுடன், நாம் அவற்றை தயக்கமின்றி நிறைவேற்றுவோம் என்பதையும் கூற வேண்டும்" – என்றார்.

# இலங்கை கராத்தே தெரிவுக்குழு தலைவராக அன்ரோ தினேஷ் தேவசகாயம் தெரிவானார்

இலங்கை கராத்தே தெரிவுக்குழுவின் தலைவராக அன்ரோ தினேஷ் தேவசகாயம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.எம்.எம். மனோஜ் உனந்தென்ன, டபிள்யூ.எம்.டி.சி.பி. விஜிகோன், சி.ஜே. சமரசேகர, அனுர ரத்ன தேவ ஆகியோர் இலங்கை கராத்தே தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கராத்தே தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதுகலை நிர்வாக பட்டதாரியான அன்ரோ தினேஷ் தேவசகாயம், ஜப்பான், அயர்லாந்து, அமெரிக்காவின் கராத்தே கலையின் உயர் நுட்பங்களைக் கற்று உயர்தர டான் டிப்ளோமா தரத்தையும் தேசிய ஏ தர கராத்தே நடுவர் தரத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.



# வவுனியாவில் இரு தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்!

(கே.வசந்தன்)

வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் அரச விடுதியை நேற்றுத் துப்பரவு செய்த திணைக்கள தொழிலாளர்கள் இருவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு தொழிலாளர்களும் விடுதியை துப்புரவு செய்த போது அங்கிருந்த குளவிகள் கலைந்து இருவருக்கும் கொட்டின. மோசமாகப் பாதிக்கப்பட்ட இருவரும் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர் க்கபபட்டுள்ளனர்.

திணைக்கள தொழிலாளர்களான வே.நாகேந்திரன் (வயது 52), கோணேஸ்வரன் (வயது 46) ஆகிய இருவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுளளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸெ முன்னெடுத்துள்ளனர்.



# மண்டபம் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த போதைப் பொருள் பறிமுதல்

## ஆறு பேர் கைதாகினர்



இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 700 கிலோ குட்கா, பான்மசாலா போதை பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கையில் பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். கடந்த வாரம் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையான உத்தரவுகளை பிறப்பித்தார். அதன் பேரில் வெளி மாநிலங்களில் இருந்து குட்கா உள்ளிட் போதைப்பொருள்கள் கடத்தல் தடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளில் போதைப் பொருள் கடத்துவதாக பொலிஸ் சூப்பிரண்டு சந்தீஷ்க்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்ப டையில் கேணிக்கரை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இரவு ரோந்து பணிகள் மற்றும் வாகன சோதனைகளை தீவிரப்படுத்தினர்.

இந்த நிலையில் கேணிக்கரை பொலிஸ் உதவி ஆய்வாளர் தினேஷ் தலைமையிலான பொலிஸார் இராமநாதபுரம் நகர் பகுதிகளான கான்சாகிப் தெரு, நாகநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிரடியாக வாகன சோதனை மற்றும் தீவிர ரோந்து பணியினை மேற்கொண்டனர்.

அப்போது சந்தேகத்துக்கு இடமாக வந்த வாகனத்தை மறித்து சோதனை செய்தனர். அப்போது அதில் சுமார் 700 கிலோ எடையில் மூடை, மூடைகளாக தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பான் மசாலா பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வாகனத்தையும் பறிமுதல் செய்த பொலிஸார் அதில் இருந்த 6 பேரையும் கைது செய்து தொடர்ந்து தீவிர விசாரணை செய்து வருகின்றனர். இந்த குட்கா மற்றும் பான்மசாலா பொருள்க எங்கிருந்து, யாருக்காக கடத்தி வரப்பட்டன என்று விசாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இரவு நேரங்களில் வாகன சோதனைகளில் தீவிரமாக ஈடுபட பொலிஸ் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேபோல், இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரத்தை அடுத்த மண்டபம் அருகேயுள்ள வேதாளை பகுதியில் நள்ளிரவில் பொலிஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் வந்த வாகனத்தை தடுத்து நிறுத்தினர்.

சற்று தூரம் தள்ளிச் சென்று நிறுத்தப்பட்ட வாகனத்தில் இருந்து டிரைவர் தப்பி ஓடிவிட்டார். இதையடுத்து அந்த வாகனத்தை சோதனை செய்த போது அதில் 5 லட்சம் ரூபா மதிப்புள்ள வலி நிவாரணி மாத்திரைகள் இருந்தமௌ கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

இந்த மாத்திரைகள் இலங்கைக்கு கடத்துவதற்காக எடுத்து வரப்பட்டு இருக்கலாம் என்று கருதிய பொலிஸார் வாகனத்தில் இருந்து தப்பி ஓடிய நபரை தீவிரமாக தேடி வருகிறனர்




# அரச துறையில் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"அரசாங்கத்தின் அனைத்து துறைகளிலும் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடு தற்போது முன்னேற்றமடைந்து வருகின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசபந்து லெஸ்லி தேவேந்திரவின் தொழிற்சங்க பணிகளுக்கு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இன்று நாம் ஒரு கடினமான சூழ்நிலையில் இருந்து நாடென்ற வகையில் முன்னோக்கிப் பயணிக்கிறோம். நமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இன்று சிங்களப் புத்தாண்டையும் வெசாக் பண்டிகையையும் எமது நாட்டு மக்கள் கொண்டாடிய விதத்தைப் பார்க்கும் போது ஒரு வகையில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் எனக்கு அதில் திருப்தி கொள்ள முடியாது. இப்போதுதான் எழுந்து நடக்க ஆரம்பித்திருக்கிறோம். இன்னும் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

2027 வரை கடனை செலுத்தாமல் இருப்பதற்கான வாய்ப்பை நாங்கள் தற்பொழுது பெற்றுள்ளோம். ஆனால் வட்டியைச் செலுத்த வேண்டும். ஆனால் கடனை செலுத்தத் தேவையில்லை. 2042 வரை கடனை திருப்பி செலுத்துவதற்கு கால அவகாசம் கேட்டுள்ளோம். இது குறித்து ஆராய்ந்து இறுதி உடன்பாடு எட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். கடன் சுமையால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாது.

ஆனால், இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் தொடர்ந்து இருந்தால், மீண்டும் கடன் பெற வேண்டியிருக்கும். இவ்வாறே வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொண்டிருந்தால், கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், தற்போது உள்நாட்டுக் கடன்கள் பெற்றுக்கொள்வதைக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளோம். உள்நாட்டு கடன் வரம்புக்குட்பட்டால், ஊழியர் சேமலாப வைப்பு நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய தொகையும் கட்டுப்படுத்தப்படும்.

உள்நாட்டில் முதலீடு செய்வதா அல்லது வெளிநாட்டில் முதலீடு செய்வதா என்பதும் அந்த நிறுவனங்களில் சேகரிக்கப்படும் நிதியை எப்படி முதலீடு செய்வது என்பதும் அடுத்த கேள்வியாக எழுகிறது. அந்த முடிவை யார் எடுக்க வேண்டும் என்பது இன்று தொழிற்சங்க இயக்கத்தில் கவனம் செலுத்தும் விடயமாக மாறிவிட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில் மிக முக்கியமான துறை நிதித்துறை ஆகும். வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களால் தான் வர்த்தகப் பொருளாதாரம் தீர்மானிக்கப்படுகிறது. எனவே, மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றை பலப்படுத்தி, வங்கித்துறையில் அரசாங்கத்தின் உரிமையை தக்கவைக்க அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளின் பங்குகளைப் பெற்று நிதித்துறையில் அரசாங்கத்தின் பலத்தை தக்கவைக்க பணியாற்ற வேண்டும். அங்கிருந்துதான் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற எதிர்பார்க்கின்றோம்.

ஏனைய அரச நிறுவனங்களுக்கு,

05








# அரச துறையில் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் ரீதியாக பணிப்பாளர் சபை நியமிக்கப்படுவதை தடுக்கும் வகையில் சில புதிய சட்டங்களை முன்வைக்க எதிர் பார்த்துள்ளோம். இந்த நாட்டின் வளர்ச்சி குறித்து புதிதாக சிந்திக்க வேண்டும். பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படா விட்டால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லை.

இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கும் துயரம் எனக்கு புரிகி றது. இந்த நாட்டில் 2019 இல் 15 வீதமாக இருந்த வறுமை நிலை இன்று 26 வீதமாக அதிகரித்துள்ளது. வருமான வழிகள் அற்ற கல்வி வசதி இல்லாத ஒரு பிரிவினர் உள்ளனர்.

அதன்படி, 2032ஆம் ஆண்டுக்குள் அதனை 10 வீத மாக குறைக்க இப்போது ஒப்புக்கொண்டுள்ளோம். இது சர்வ தேச நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளில் சேர்க்கப் பட்டுள்ளது. எனவே, இந்த வேலைத் திட்டத்தைத் தொடர வேண்டும்.

இந்த பல்தரப்பட்ட வறுமைக்கு தீர்வு காணும் நோக்கில் தான் உறுமய காணி உரிமை வழங்குதல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம்.மேலும், கொழும்பு அடுக்குமாடி குடியிருப்புகளின் உரிமையை அந்த குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சொத்துக்கள் இல்லாதவர்களுக்கு அந்த சொத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே நாம் புதிதாக சிந் தித்து செயற்பட வேண்டும்.

பொருளாதார ரீதியில் இப்போது நாம் எழுந்து நிற்க ஆரம்பித்துள்ளோம். நாம் நடக்க வேண்டும். இந்த ஆண்டு அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதே நேரத்தில், தனியார் துறையி லும் சம்பளத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இவ்வருடம் அதிக நிவாரணங்களை வழங்குவதற்கான



பொருளாதார பலம் எம்மிடம் இல்லாவிட்டாலும் அடுத்த வரு டம் அரச ஊழியர்களுக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும். இதற்காக அரச துறையின் அனைத்து துறைகளிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளை தீர்க்க குழுவொன்றை நியமிக்க தீர்மானித்துள்ளோம்.

அதற்கிணங்க தற்போது அந்த குழுவிற்குப் பொருத்த மானவர்களை நியமிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இது கடினமான பயணம். கடந்த பொருளாதார நெருக்கடியினால் இந்நாட்டின் பொது மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செல்ல வேண்டும்.

குறிப்பாக, தொழிலாளர் மையமொன்றை நாம் உருவாக் குவோம். புதிய தொழிற்சங்கங்கள், ஊழியர் உரிமைக ளைப் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான வழிமுறைகள் என்ன என்பதை கவனத்தில் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த பணியை தொடர, வருடாந்தம் ஒரு தொகையை ஒதுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பில் நாம் மேலும் கலந்துரையாடுவோம்." – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வழக்கு இன்று. அது குறித்தோ அல்லது பொது வேட்பாளர் பேச்சுக் குறித்தோ ஏதும் சம்பந்தன் வினாவினாரா என்று சுமந்திரனைக் கேட்டேன்.

"ஐயா அந்த விடயங்கள் குறித்து எதுவும் கேட்கவும் இல்லை, பேசவும் இல்லை. ஜனாதிபதி தேர்தல் விடயங்களைக் கையாள்வது பற்றியே குறிப்பிட்டார்" என்றார் சுமந்திரன்.

\+ + +

அரசியல் பதவிகளில் இருப்போரின் வாய்ச்சொல் பேச்சுக்கு கட்டுப்பட்டு, முறைகேடாக நடந்து கொள்ளும் அரச அதிகாரிகள் கடைசியில் தாங்கள்தான் அதற்கான வினைகளை – தொல்லைகளை – அனுபவிக்க நேரிடும் என்பதை ஏனோ மறந்து விடுகின்றார்கள். அதனால்தான் இந்த பாவக்கதை சோகக் கதையாகத் தொடர்கின்றது.

அது பற்றிய ஒரு சோகக் கதை விடயம் இப்போது பேசு பொருளாகி இருக்கின்றது.

ஒரு கியூப் ஆற்று மணல் என்ன விலை போகின்றது என்பது எல்லோருக்கும் தெரியும். அது இடத்துக்கு இடம் கொள்ளை விலைக்குப் போகின்றது.

வெளியில் அந்த விலை என்றால், அரசு சொத்தான மணலை கொள்ளை போகும் அறாவிலைக்கு விற்ற ஓர் அதிகாரி இப்போது மாட்டிக் கொண்டு முழிக்கிறார்.

கிளிநொச்சி அக்கராயனில் ஆறு ஒன்று புனரமைக்கப்பட்ட போது அள்ளப்பட்ட மணலை அரசியலில் – அரசுப் பக்கத்தில் – பதவி வகிப்பவரின் அழுத்தம் காரணமாக அவருக்கு வேண்டப்பட்டவருக்கு அரச நடைமுறை விதிகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு, சட்ட விரோதமான முறையில், ஒரு கியூப் மணல் ஆக 250 ரூபா என்று அடிப்படையில் 342.76 கியூப்பையும் விற்றிருக்கின்றார் பிரதேச சபையின் செயலாளர்.

அது பற்றி விசாரணை நடத்திய கணக்காய்வு அலுவலகம் ஒரு கியூப்புக்கு ஆக 12 ஆயிரம் ரூபா என்று கணக்கிட்டு, அந்த அடிப்படையில் சபைக்கு 40 லட்சத்து 27 ஆயிரத்து 430 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, அதற்குப் பொறுப்புக் கூறுமாறு பிரதேச செயலரை மாட்டி உள்ளது.

இனி என்ன? அரசியல்வாதிகளினதும், அவர் வழியில் மேலதிகாரிகளினதும் வாய்ச்சொல் அழுத்தத்திற்குப் பணிந்த பிரதேச செயலர் இனி 40 லட்சம் ரூபா வைத் தன் மடியில் இருந்துதான் போட்டுக் கட்ட வேண்டும். நல்லவேளை கியூப் 12 ஆயிரம் ரூபா என்று கணக்கிட்டமையால் இந்த அளவோடு போட்டுக் கட்ட வேண்டிய தொகை முடிந்தது என அவர் மன ஆறுதல் பட வேண்டியதுதான்....!

எழுத்தில் இல்லாத – முறையற்ற – உத்தரவுகளுக்கு அடி பணிந்தால் இப்படித் தான் நேரிடும் என்பதை அரசு அதிகாரிகள் புரியாத வரையில், அவர்கள் தமது எதிர்காலத்தை தாங்களே நெருக்கடியில் மூழ்கடிக்க வேண்டித்தான் இருக்கும்.

## பாலிதவின் கருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பிரதான இரண்டு தேர்தல்களையும் அரசு நடத்தியே தீர வேண்டும். இரண்டு தேர்தல்களையும் எதிர்கொள்ள நாம் தயாராகவுள்ளோம்." – என்றார்.

# நேற்றும் சம்பளப் பேச்சுவார்த்தைக்கு செல்லாத பெருந்தோட்ட நிறுவனங்கள்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பாக நேற்று நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.

இதனால் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நேற்று இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ள முடியாமற்போனது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான நேற்றைய பேச்சுவார்த்தை நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் அமைச்சில் நடைபெறவிருந்தது.

தொழில் ஆணையாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தைக்காக வருகை தந்திருந்த போதிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் எவரும் இதன்போது சமுகமளித்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விமர்சனங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்குக் கொண்டுவர தற்போதுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களையும் இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுவது நல்லது. அது தொடர்பான பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொண்டுவருமானால் அது மிகவும் பொருத்தம் எனத் தெரிவித்திருந்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த யோசனையை நான் தெரிவித்த பின்னர், அதற்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் பல்வேறு விமர்சனங்களைத் தெரிவிக்க ஆரம்பித்தனர். எமது கட்சி அலுவலகத்துக்கு முன்பாக 7 பேர் வரை வந்து ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

எனவே, இந்த விடயங்கள், விமர்சனங்கள் மற்றும் கேள்விகள் அனைத்துக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி உரிய பதிலடி கொடுப்பேன்." – என்றார்.

## ஜனநாயகம் தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
குழுவின் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஜனநாயகத்தை அதிகம் மதிக்கும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியும், தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இறங்காது என்பது ஊரறியும், உலகறியும்.

எனினும், எதற்கெடுத்தாலும் அறிக்கை விடுத்தும், அறிவிப்புகளை விடுத்தும் அரசியல் நடத்தும் வாய்சொல் வீரர்கள், எமது கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவால் வெளியிடப்பட்டுள்ள கருத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு கட்சிக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது கட்சியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்ட கருத்தை ஆழமாக ஆராயாமல் இவ்வாறு அறிவிப்புகளை விடுப்பது சிறுபிள்ளைத்தனமானது. நாட்டு மக்களுக்குத் தற்போதைய சூழ்நிலையில் மேலதிக சுமை தேவையில்லை, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்ட பின்னர், சுதந்திரமான சூழலில் தேர்தலை நடத்துவதே ஜனநாயக பண்பு என்ற தொனியிலேயே அவர் கருத்தை வெளியிட்டிருந்தார். இது ஒரு கோரிக்கை மாத்திரமே, மாறாக அரசின் முடிவு அல்ல.

நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் எப்படி நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியும் என்பதே அவரின் வாதமாகும். அவரின் கருத்திலும் நியாயம் இல்லாமல் இல்லை. எது எப்படி இருந்தாலும் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்களை நடத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக உள்ளார்."
– என்றுள்ளது.

## விக்கிக்கு பாலித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
யோசனைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ள அரசியல்வாதிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"எனது யோசனையை ஒரு தரப்பு எதிர்த்தாலும் இன்னொரு தரப்பு ஆதரவாகக் கருத்து வெளியிட்டு வருகின்றது.

விக்னேஸ்வரன் எம்.பி. உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள் எனது கருத்தை வரவேற்றுள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றார்.

# யாழ் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் அகழ்ந்து வெளியே கொண்டு செல்வதற்குக் கட்டுப்பாடு




உரிய வழித்தட அனுமதி இன்றி யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக்கல் கொண்டு செல்ல முடியாது என மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் நேற்று மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில் அகழப்படும் சுண்ணாம்புக் கற்கள் எவ்வித அனுமதியும் இன்றி வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய, அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொண்ட துறைசார் அதிகாரிகள் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவத்தோடு, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. சட்ட விதி முறைகளுக்கு அமைய சுண்ணாம்புக்கல் அகழ வேண்டும் எனவும், அதனை உள்ளூர் தேவைக்கே பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது .

அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக அகழ்வு பணிகளில் ஈடுபடுவோருக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதி பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனுமதிப்பத்திர விதிமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றனவா எனத் தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளுக்கு இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது .

அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு மண் கொண்டு வருவதை தடை செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.



# சீரற்ற காலநிலை தொடர்வதால் கங்கைகளின் நீர்மட்டம் உயர்வு

நாட்டில் தொடரும் சீரற்ற நிலையினால் மகாவலி, களனி, களு, நில்வளா ஆகிய கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், அந்த கங்கைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கெனியோன் நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டன.

விமலசுரேந்திர, காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாகலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர், நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளதாக அந்த நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் முயற்சி சரி வராது

அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாதவர்கள் உருப்படவே முடியாது. அதுவும் அரசியலில் முன் அனுபவங்களை வழிகாட்டல்களாகக் கொள்ளாதவர்கள் தேறவே முடியாது.

அப்படி முன்னனுபவப் பாடத்தை புறமொதுக்கி, ஒரு நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் வரும் ஜூன் 27ஆம் திகதி 60 வயதை எட்டுகின்றார். அந்தத் திகதியிலிருந்து அவர் ஓய்வு பெற வேண்டும். அதுதான் சட்ட ஏற்பாடு.

சட்டமா அதிபருக்கு மட்டுமல்ல, நீதிவான்கள், நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் போன்ற நீதித்துறையினரின் பதவிகள் எல்லாவற்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட ஓய்வு பெறும் வயதெல்லைகள் உண்டு. பதவி நிலைக்கேற்ப அது மாறுபட்டாலும் ஒவ்வொரு பதவிக்கும் அது வரையறுக்கப்பட்டுள்ளது.

அந்த வயதெல்லையைத் தாண்டி ஒரு நாள் கூட அவர்கள் பதவியில் இருக்க முடியாது - அது பிரதம நீதியரசராக இருந்தாலும் சரி.

இந்தப் பின்புலத்தில்தான் வரும் 27ஆம் திகதி 60 வயதை எட்டி, அத்திகதியிலிருந்து ஓய்வு பெற வேண்டிய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்துக்கு அத்திகதியிலிருந்து ஆறு மாத கால சேவை நீடிப்பு வழங்குவதற்கு அரசமைப்பு கவுன்ஸிலுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஒன்று - அந்தப் பதவி நீடிப்பு சட்டத்துக்கு உட்பட்டதல்ல.

அடுத்தது - ஏற்கனவே இத்தகைய நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் பரிந்துரைகள் குறித்து நெருப்பெடுக்கும் நிலையில்தான் அரசமைப்புக் கவுன்ஸில் உள்ளது.

இந்த இரண்டு நிலைமைகளின் பின்னணியிலும், மேற்படி பதவி நீடிப்புப் பரிந்துரையை அரசமைப்பு கவுன்ஸில் நிராகரிக்கும் என்பது பெரும்பாலும் உறுதி.

இதேபோன்று முன்னரும் ஒரு சம்பவம் உண்டு. 2008இல் சட்டமா அதிபராக இருந்த சி.ஆர். டி சில்வாவுக்கு 6 மாத காலப் பதவி நீடிப்பு வழங்கும் வர்த்தமானி அறிவித்தலை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டார். அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தமது அறுபதாவது வயது பூர்த்தியன்று சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வா ஓய்வு பெற்றுச் செல்வதை அப்போதைய உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.

இப்போது சட்டமா அதிபரின் பதவி நீடிப்புக்கு அரசமைப்பு கவுன்ஸில் பெரும்பாலும் அனுமதி வழங்காது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அனுமதி வழங்கினாலும் கூட உயர் நீதிமன்றம் அதற்கு இடமளிக்குமா என்ற கேள்வியும் உள்ளது.

தற்போதைய பிரதம நீதியரசர் ஆண்டு இறுதியில் ஓய்வு பெறுகிறார். அச்சமயம் சட்டமா அதிபர் பதவியில் சஞ்சய் ராஜரத்தினம் இருந்தால், அவரை நேரடியாக பிரதம நீதியரசராக நியமிக்கலாம் என்று ஜனாதிபதி சிந்திக்கிறார் எனக் கூறப்படுகின்றது. அதற்காகவே அந்தத் திகதி வரை சஞ்சய் ராஜரத்தினத்தைப் பதவியில் நீடிக்க வைக்க அவர் எத்தனிக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

அப்படி சட்டமா அதிபர் பதவியில் சஞ்சய் ராஜரத்தினம் தொடர்ந்து நீடிப்பாராயின் அவருக்கு பின்னர் அந்த பதவியைப் பெறுவதற்கு காத்திருக்கும் சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஐஷா ஜினசேன அம்மையார் அந்த சட்டமா அதிபர் பதவியை எட்டாமலேயே ஓய்வு பெற வேண்டிய கட்டாயம் நேர்ந்து விடும்.

ஜூன் 27ஆம் திகதி 60 வயதில் சட்டமா அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற வேண்டியிருக்கும் சஞ்சய் ராஜரத்தினம் அத்திகதிக்கிடையில் உயர் நீதிமன்றில் ஒரு நீதியரசர் நியமனத்தைப் பெறுவாராயின் அவர் அடுத்த ஐந்து வருடங்களுக்கு - 65 வயது வரை - நீதியரசர் பதவியில் நீடிக்க முடியும்.

ஆனால் ஜனாதிபதிக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையில் நிலவும் பிணக்கையொட்டி உயர் நீதிமன்றத்துக்கு போன ஒரு வழக்கின் அடிப்படையில், பிரதம நீதியரசர் தவிர்ந்த பிற புதிய நீதியரசர் நியமனங்களுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

அதனால்தான் சஞ்சய் ராஜரத்தினத்தைத் தாம் அடுத்த பிரதம நீதியரசராக நியமிக்க கூடிய வாய்ப்பு வரும் வரை சட்டமா அதிபர் பதவியில் பேண ரணில் முயல்கின்றார். ஆனால் அந்த முயற்சியில் அவர் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பு குறைவு என்றே தோன்றுகின்றது.

# இந்திய அரசியல் சாசனத்தின் கழுத்தை காங்கிரஸ் நெரித்தது என்கிறார் மோடி



அவசர காலத்தில் அரசியல் சாசனத்தின் கழுத்தை நெரித்த கட்சி காங்கிரஸ் என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

பஞ்சாபின் ஹோியார்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி,

"புதிய விருப்பங்கள், புதிய எதிர்பார்ப்புகள், புதிய நம்பிக்கை ஆகியவற்றுடன் இன்று நாடு இருக்கிறது. அறுதிப் பெரும்பான்மையுடன் மத்திய அரசு ஹாட்ரிக் அடிக்கப் போகிறது.

பல பத்தாண்டுகளுக்குப் பிறகு இது நடக்கப் போகிறது. இதற்கு மிகப்பெரிய காரணம், "வளர்ந்த இந்தியா" என்ற கனவுதான். இன்று ஒவ்வொரு இந்தியரும் "வளர்ந்த இந்தியா" என்ற கனவோடு ஒன்றுபட்டுள்ளனர். எனவே, நாட்டின் ஒவ்வொரு மக்களும் நம்மை ஆசீர்வதிக்கிறார்கள்.

நமது நாட்டு மக்கள் தற்போது வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அங்கு இந்தியா மீதும், இந்தியர்கள் மீதும் மரியாதை அதிகரித்திருப்பதை அவர்களே பார்க்கிறார்கள். நாட்டில் பலமான அரசாங்கம் இருக்கும் போது வெளிநாட்டு அரசாங்கங்கள் நமது பலத்தை கவனிக்கின்றன.

ஏழைகள் நலன் என்பது எனது அரசாங்கத்தின் ஒரு பெரிய முன்னுரிமை. கடந்த 10 ஆண்டுகளில், ஏழை எளிய மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் மற்றும் இலவச சிகிச்சை வசதிகளை வழங்கியுள்ளோம். இன்று, எந்த ஏழை தாயின் குழந்தையும் பசியுடன் தூங்க வேண்டிய நிலை இல்லை. இன்று எந்த ஏழைப் பெண்ணும் தனது நோயை மறைக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

இந்த தேர்தல் காலத்திலும், நமது அரசாங்கம் ஒரு நொடியை கூட வீணாக்கவில்லை. ஆட்சி அமைந்தவுடன் அடுத்த 125 நாட்களில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்கான பாதை வரைபட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய முடிவுகள் குறித்தும் திட்டமிடப்படுகிறது. அதோடு, அடுத்த 25 ஆண்டுகாலத்திற்கான தொலைநோக்குப் பார்வையோடு நமது அரசு வேகமாக முன்னேறி வருகிறது.

காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணியின் சுயநல அரசியலாலும், வாக்கு வங்கி அரசியலாலும் நாட்டுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. வாக்கு வங்கி மீது கொண்ட மோகத்தால், நாடு பிரிந்த நேரத்தில் கர்தார்பூர் சாஹிப் நகரை இந்தியாவோடு சேர்க்க வேண்டும் என்று உரிமையை நிலைநாட்ட அவர்களால் முடியவில்லை.

இவர்கள்தான் தங்கள் வாக்கு வங்கிக்காக ராமர் கோயில் கட்டுவதை தொடர்ந்து எதிர்த்தவர்கள். தாஜா செய்யும் அரசியல் காரணமாக இண்டியா கூட்டணி குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்க்கிறது.

இண்டியா கூட்டணியைச் சேர்ந்தவர்கள் தற்போது, அரசியலமைப்பு குறித்து அதிகம் முழங்குகிறார்கள். அவசர காலத்தில் அரசியல் சாசனத்தின் கழுத்தை நெரித்தவர்கள் இவர்கள். 1984இல் ஏற்பட்ட கலவரத்தில், சீக்கியர்களின் கழுத்தில் டயர்களைக் கட்டி எரித்தபோது, இவர்கள் அரசியலமைப்பைப் பற்றி சிந்திக்கவில்லை.

ஊழலின் தாய் காங்கிரஸ். 60 ஆண்டுகளாக காங்கிரஸ் பல ஊழல்களை செய்துள்ளது."– என்றார்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி திருச்சியில் விவசாயிகள் போராட்டம்



விவசாயிகளின் விளை பொருள்களுக்கு இருமடங்கு லாபகரமான விலை வழங்கப்படும் என பா.ஜ.க. அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததைக் கண்டித்து தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் திருச்சி ஓயாமரி சுடுகாட்டில் சடலம் போல் படுத்து விவசாயிகள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2014 மற்றும் 2019 மக்களவைத் தேர்தல்களின் போது பா.ஜ.க. அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு உரிய லாபகரமான விலை வழங்க வேண்டும். கர்நாடக அரசு காவிரியில் தமிழகத்துக்குரிய தண்ணீரை திறந்து விட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்துக்கு தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.அய்யாக்கண்ணு தலைமை வகித்தார். இந்த போராட்டத்தின் போது விவசாயிகள் இறந்தவர்கள் போல் சுடுகாட்டில் படுத்துக் கொண்டனர். அவர்களுக்கு மாலை அணிவித்து, இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன.

இந்தப் போராட்டம் குறித்து தகவல் அறிந்தவுடன் பொலிஸார் விரைந்து சென்று, விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதுகுறித்து பி.அய்யாக்கண்ணு கூறுகையில், "விவசாயிகளுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை. கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய அரசு மறுக்கிறது. இதைக் கண்டித்து விவசாயிகள் போராட்டம் நடத்தவும் அனுமதிக்க வில்லை.

கன்னியாகுமரியில் பிரதமர் மோடி தியானம் செய்யும் இடத்துக்குச் செல்ல விவசாயிகளை அனுமதிக்க வேண்டும். இல்லையேல் இங்கேயே நாங்கள் தியானம் செய்ய அனுமதிக்க வேண்டும்." – என்றார்.



# இஸ்ரேலின் ஏவுகணை மீது எழுதப்பட்ட வாசகத்தால் எழுந்துள்ள புதிய சர்ச்சை

இஸ்ரேல் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் நிக்கி ஹாலே, அந்த நாட்டு இராணுவ ஏவுகணை ஒன்றில் எழுதிய வாசகம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த ஏவுகணையில் "அவர்களின் கதையை முடித்து விடுங்கள்" என அவர் எழுதும் புகைப்படம் சமூக வலை தளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படையினருக்கு இடையே காசா பகுதியில் போர் நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து பாலஸ்தீனியர்கள் மீது தொடர் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, இந்த தாக்குதல் மூலம் பாலஸ்தீனத்தில் 36 ஆயிரம் பேர் வரையில் பலியாகியுள்ளனர்.

# பிரித்தானிய நாடாளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டுள்ளது



பிரித்தானிய பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி நடத்தப்படவுள்ள நிலையில், பிரித்தானிய நாடாளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து உரிய காலத்திற்கு முன்னதாகவே தேர்தலை நடத்தும் பிரித்தானிய பிரதமரின் தீர்மானத்திற்கு கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் கடந்த 24ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற இடைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது.

பொதுத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில், பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடையும் என்று கூறப்படும் நிலையில், நேற்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 5 வாரங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கை உள்ளிட்ட 93 நாடுகளுக்கு விசா சலுகை வழங்கும் தாய்லாந்து

இலங்கை உள்ளிட்ட 93 நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா சலுகைகளை தாய்லாந்து அமைச்சரவை வழங்கியுள்ளது.

இதற்கமைய, மேற்படி நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் விசா இன்றி 60 நாள்கள் தமது நாட்டில் தங்கியிருப்பதற்கு தாய்லாந்து அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தாய்லாந்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

# மெக்சிகோவில் பிரச்சாரத்தின்போது மேயர் வேட்பாளர் சுட்டுக் கொலை



மெக்சிகோவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு இருந்த மேயர் வேட்பாளரான ஆல்ஃபிரடோ கப்ரேரா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதனை குரேரோ ஆளுநர் உறுதி செய்துள்ளார்.

எதிர்வரும் ஜ/ன் 2 ஆம் திகதி ஜனாதிபதி உட்பட பல்வேறு பொறுப்புகளுக்கு அந்த நாட்டில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டு இருந்த எதிர்க்கட்சி கூட்டணி வேட்பாளரான மேயர் வேட்பாளர் ஆல்ஃபிரடோ கப்ரேரா அருகில் வந்த நபர் ஒருவர், அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார். இந்த சம்பவம், அந்த நிகழ்வில் பங்கேற்றவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த குற்ற செயலில் ஈடுபட்டவர் மற்றும் அதன் பின்னணியில் இருப்பவர்களை அடையாளம் கண்டு, சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டுமென குரேரோ ஆளுநர் தெரிவித்துள்ளார்.


கடந்த செப்டம்பர் முதல் தேர்தலை முன்னிட்டு சுமார் 22 படுகொலை சம்பவங்கள் நாட்டில் அரங்கேறி உள்ளன என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் ஆளும் அரசு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகளை கூட செய்ய தவறி உள்ளதாக எதிர்க்கட்சி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பி.ஆர்.ஐ. கட்சி குற்றச்சாட்டு வைத்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள தேர்தலில் சுமார் 27 ஆயிரம் பாதுகாப்பு படையினர் பணியில் ஈடுபட உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் புதிய ஜனாதிபதி, செனட் உறுப்பினர்கள், ஆளுநர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

# 4 விளையாட்டு சங்கங்கள், சம்மேளனங்களின் பதிவுகளை இடைநிறுத்தி வர்த்தமானி வெளியீடு




நான்கு விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் பதிவுகளை இடைநிறுத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

சைக்கிளோட்ட சம்மேளனம், ரக்பி சம்மேளனம், மோட்டார் விளையாட்டு சங்கம், வலைப்பந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் தேர்தல்கள் உரிய முறையில் நடத்தப்படும் வரை, அவற்றை நேற்று முதல் விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கீழ் கொண்டுவந்துள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாவலப்பிட்டி மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம்







(ஆ.ரமேஸ்)

நாட்டில் நிலவி வரும் மோசமான காலநிலை சீர்கேடு காரணமாக பலத்த காற்றுடன் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் நாவலப்பிட்டி பிரதேசத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பலத்த மழையால் ஆங்காங்கே மண்சரிவுகளும் ஏற்பட்டு போக்குவரத்துப் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில், நாவலப்பிட்டி தொடக்கம் பெலாம்பிட்டிய வரை செல்லும் நாகஸ்தன்னை ஒற்றை வழி பிரதான பாதையில் பல இடங்களில் பைனஸ் மரங்கள் சரிந்து வீதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் இந்த வீதியூடான போக்குவரத்து நேற்றுக் காலை முதல் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஊடாக சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்களின் சேவை பாதிக்கப்பட்டு பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்களின் அன்றாட அவசர பயணங்களுக்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# திருமலை மேலதிக அரச அதிபராக சுதாகரன நேற்றுப் பொறுப்பேற்றார்

(எஸ்.கீதபொன்கலன், ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.சுதாகரன் நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாக சேவை தரம் 1 உத்தியோகத்தரான இவர் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் (காணி) மற்றும் கிழக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது திருகோணமலை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராகவும் அவர் பதில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# விகாரை புனரமைப்புக்காக திலீபன் எம்.பி. நிதி ஒதுக்கீடு

(வவுனியா நிருபர்)

வவுனியாவின் எல்லைப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபனாக் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நந்திமித்திரகம கிராமத்தில் அமைந்துள்ள பன்சாலையின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்காக 10 லட்சம் ரூபா நிதி அவராக் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடம் ஒன்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினரால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அத்துடன், அதற்கு அண்மையில் உள்ள கம்பிலிவெவ சிங்கள குடியேற்றப் பகுதிக்கும் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்காக 19 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு அவரால் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.












# இறுதிப் போரில் குழந்தைகளைக் கொன்ற போது உங்களின் இரக்கம் எங்கே போய் ஒளிந்திருந்தது?

## வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

(கே.வசந்தன்)

காசா சிறுவர்களுக்காக நிதி வழங்கும் அரசாங்கத்திற்கு இறுதிப்போரில் தமிழ் குழந்தைகள் கொலை செய்யப்படும் போது இரக்கம் வரவில்லையா என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பினர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

சர்வதேச நீதியைக் கோரி நாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமது போராட்டங்களைத் தடுக்கும் விதத்தில் பல்வேறு அடக்குமுறைகள் இந்த அரசால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் நாம் நீதிக்கான எமது போராட்டங்களில் தொடர்ச்சியாகப் பயணிப்போம்.

காசாவில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்ட காசா நிதியத்திற்கு ஜனாதிபதியால் அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இன்னொரு நாட்டிற்கு நன்கொடை வழங்கப்படுகின்றது. இதனைத் தமக்கான ஆதரவினை பெருக்குவதற்கான ஓர் அரசியல் நகர்வாகவே பார்க்க முடியும்.

தற்போது காசா சிறுவர்களுக்காக நிதி ஒதுக்குபவர்கள் இறுதிப் போரில் தமிழ்க் குழந்தைகளைக் கொரலை செய்தார்கள். அப்போது அவர்களுக்கு இரக்கம் வரவில்லையா? – எனக் கேள்வி எழுப்பினர்.




# தீவுகளுக்கான நோயாளர் காவு படகுச் சேவை நிறுத்துவதற்கு கியூமெடிக்கா நிறுவனம் முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடல் கடந்த தீவுகளிற்கான நோயாளர் காவு படகுச் சேவையை நிரந்தரமாக நிறுத்துவதாக கியூமெடிக்கா நிறுவனம் மாவட்டச் செயலகத்திற்கு எழுத்தில் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கடல் கடந்த தீவுகளிற்கான நோயாளர் காவு படகுச் சேவையினை தொண்டு நிறுவனமான கியூமெடிக்கா நிறுவனமே மேற்கொண்டு வருகின்றது. இந்தப் படகுச் சேவையினை நீண்ட காலமாக நடத்துகின்றனர்.

இருந்தபோதும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது நிறுவனத்திற்கும் ஏற்பட்டுள்ள அதிகரித்த நிதி நெருக்கடி காரணமாக இப்படகு சேவையை நிறுத்துவதாக கியூமெடிக்கா மாவட்டச் செயலகத்திற்கு அறிவித்துள்ளது. இதனால் இவ் விடயத்திற்கு உடன் மாற்று ஏற்பாடு மேற்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.



# யாழ் எம்.பிக்களின் திட்டங்களுக்கு நிதி இல்லை; வன்னி எம்.பியின் யாழ் திட்டங்களுக்கு ஒதுக்கீடு!

## அது எப்படி என்று நேற்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சர்ச்சை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான நிதி ஒதுக்கீடு மறுக்கப்பட்டுள்ள போதும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரில் யாழ்ப்பாணத்திற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் நேற்றைய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ் விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்தது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமாக 8 பேர் உள்ளனர். இதில் டக்ளஸ் தேவானந்தா, த.சித்தார்த்தன், சி.சிறிதரன் ஆகிய மூவருக்கு மட்டும் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவற்றை சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் போன்றோர் இது வேண்டுமென்றே இப்படி ஒதுக்கப்படுவதாகக் குரல் எழுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் சிபார்சில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 திட்டங்களிற்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பெயரில் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்ட சமயமே சர்ச்சை ஏற்பட்டது. அவ்வாறானால் அத் திட்டங்களை அனுமதிக்க முடயாது என தீர்மானிக்கவா என ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரினார்.

எமது மாவட்டத்தில் எமது மக்களின் அபிவிருத்திக்காக வந்த பணத்தை திருப்பி விட விரும்பாத காரணத்தினால் அதனை அனுமதிக்கின்றோம்.

இதே நேரம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நீங்கள் கூறிய கால அவகாசத்தில் நாமும் எமது திட்டங்களை மாவட்டச் செயலகத்தில் கையளித்தோம். இருந்தும் எமது திட்டங்கள் மட்டும் அனுமதிக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைகளை சமர்ப்பித்த மறுநாளே அவற்றை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி அதன் பிரதியை உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் அனுப்பி வைத்தோம் என மாவட்டத்தின் கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

# கலனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் இ.தொ.கா. புதுவித தொழிசங்கப் போராட்டம்

## தேயிலைத் தூளை தொழிற்சாலையிலிருந்து கொண்டு செல்வதை நிறுத்துவர்









(ஆ.ரமேஸ்)

உடரதல்ல தோட்ட தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை நேற்று முதல் இ.தொ.கா. தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரும், இ.தொ.கா. பொது செயலாளருமான ஜீவன் தொண்டமான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டம் நானு ஓயா உடரதல்ல தோட்ட நிர்வாகத்தின் தான் தோன்றித்தனமான செயற்பாட்டை கண்டித்து, அந்தத் தோட்ட தொழிலாளர்கள்

கடந்த ஒருமாத காலமாக பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

உடரதல்ல தோட்டத் தொழிலாளர்களுக்கும் அத்தோட்ட நிர்வாகத்துக்கும் இடையிலான பிரச்சினை தொழிற்சங்க பிரச்சினையாகும். இப் பிரச்சினைக்கு தொழிற் சங்கம்,

தோட்ட நிர்வாகம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகியன் இணைந்து தீர்வுகளை பெறவேண்டும், மாறாக தொழிலாளர்களுக்கு எதிராக தொழிற்சங்க பிரச்சினையில் பொலிஸார் தலையிடுவதை தவிர்த்து கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடயத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உடரதல்ல தோட்டத்தில் இலக்கம் 5 தேயிலை மலையில் தேயிலையை அகற்றி அங்கு கோப்பி பயிரிட கலனிவெளி பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் உடரதல்ல தோட்ட நிர்வாகம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

தோட்ட நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடு உடரதல்ல தோட்ட தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கையை கேள்விகுறியாக்கிவிடும் என்பதால் அதனைத் தொழிலாளர்கள் எதிர்த்து வருகின்றனர்.

அத்தோட்டத் தொழிலாளர்கள் “தேயிலையை அழிக்காதே! கோப்பியை பயிரிடாதே!!” என்று தோட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டை கண்டித்து தொழில் பகிஷ்கரிப்பில் கடந்த ஒரு மாதமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தோட்ட நிர்வாகம் தேயிலை மரங்களைப் பிடுங்கி அகற்றத் தோட்டத்திற்குள் இயந்திரத்தை கொண்டு வந்த நிலையில் அதை தடுத்து நிறுத்திய தோட்ட தொழிற்சங்க தலைவர் உள்ளிட்ட மூவர் மீது தோட்ட நிர்வாக அதிகாரி பொலிஸ் முறைப்பாடு செய்து தொழிற் பிரச்சினையை பொலிஸ் பிரச்சினையாக மாற்றியுள்ளார்.

இதை தொடர்ந்து அந்தத் தோட்டத் தலைவர் மற்றும் மேலும் இருவரைத் தொழில் நீக்கம் செய்துள்ளனர்.

இந்த நிலையில் தொழில் நீக்கம் செய்தவர்களுக்கு தொழில் வழங்க வேண்டும், கோப்பி பயிரிடுவதை நிறுத்த வேண்டும் எனத் தொழிலாளர்கள் தொழிற்சங்க பேதமின்றி தீர்வு கிடைக்கும் வரை பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.

கடந்த ஒருமாத காலத்தை தொட்ட பணி பகிஷ்கரிப்பிற்கு தீர்வு பெறும் வகையில் நுவரெலியா உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் தொழிற்சங்கம் மற்றும் தோட்ட நிர்வாகத்திற்கு இடையில் பேச்சுவார்த்தை நேற்றுக் காலை உதவி தொழில் ஆணையாளர் முன்னிலையில் இடம் பெற்றது.

இந்த பேச்சு வார்த்தையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொழிற்சங்க சார்பாக கலந்து கொண்டார். இருப்பினும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இரு தரப்பினரிடத்திலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதால் அமைச்சர் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

அதேநேரத்தில் தொழிலாளர்கள் மீது தோட்ட நிர்வாகம் தொழிற்சங்க பிரச்சினைக்கு பொலிஸ் நடவடிக்கை எடுத்தது தவறு எனச் சுட்டிக்காட்டி, நுவரெலியா பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி காரியாலயத்திற்கு சென்ற அமைச்சர் தொழிற்சங்க நடவடிக்கையில் பொலிஸாரின் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும் என பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான முன்னாள் பிரதி பொலிஸ் அதிபருடனும் அவர் கலந்துரையாடினார்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறிய அமைச்சர் ஜீவன் உடரதல்ல தோட்ட தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு இ.தொ.கா. தீர்வைப் பெற்று தரும் எனத் தெரிவித்தார்.

அதே சந்தர்ப்பத்தில் உடரதல்ல தோட்ட தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை இ.தொ.கா. நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மேலும் இதற்கென கலனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் மலையகத்தின் அனைத்து தோட்டங்களிலும் தொழிலாளர்கள் பணியாற்றுவர். ஆனால் தேயிலைத் தூளை தொழிற்சாலையிலிருந்து கொண்டு செல்வதை நிறுத்துவார்கள் என்ற அடிப்படையில் தொழிற்சங்க நடவடிக்கையை தொடரவுள்ளனர் என அவர் திட்டவட்டமாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முடிவு கிட்டும் வரைப் போராட்டம் தொடரும்

## மன்னார் போராட்டத்தில் நேற்று உறுதி தெரிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

நாங்கள் இப்பொழுது கேட்டு நிற்பது எங்கள் பிள்ளைகள் எங்கே என்பது தான். சர்வதேசம் எங்களுக்கு இதற்கான முடிவைத் தரும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும் என மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கம் நேற்றைய தனது கவனவீர்ப்புப் போராட்டத்தில் வலியுறுத்தித் தெரிவித்தது.

மன்னார் மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் நேற்று வியாழக்கிழமை மன்னார் நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

இதன்போது அதிகமான பெண்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைத்து பதாதைகளை ஏந்தியவாறு இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது தாய்மார் மற்றும் உறவுகள் தங்கள் கரங்களில் ஏந்தியிருந்த பதாதைகளில் –

“அரசே! உங்களிடம் சரணடைந்த எம் உறவுகள் எங்கே?“, “ஓ.எம்.பி. நம்பிக்கை இல்லை. அது வேண்டாம்“, “சர்வதேச விசாரணை வேண்டும்“, “வெள்ளை வானில் கடத்தப்பட்ட எம் உறவுகள் எங்கே?“ எனக் காணப்பட்டன.

இதன்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் சார்பாக திருமதி உதயச்சந்திரா இங்கு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கையில் –

அரசாங்கமானது உள்நாட்டு விசாரணைகளை முன்னெடுக்கும்போது அரசானது தங்கள் பாதுகாப்பு படைகளையும் தங்கள் இனத்தையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளிலேயே காணப்படுகின்றது.

எங்கள் வீடுகளிலிருந்து எங்கள் கண்முன்னே படைகளால் அழைத்துக் கொண்டு சென்ற எங்கள் பிள்ளைகளுக்காகவே இன்று நாங்கள் இந்த இடத்திலிருந்து போராடிக் கொண்டு நிற்கின்றோம்.

நாங்கள் இறந்த பிள்ளைகளுக்காக போராடவில்லை. மாறாக எங்களிடமிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளைகளுக்காகவே போராடிக் கொண்டு இருக்கின்றோம். ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்களை கொன்று குவித்தது இந்த அரசு.

அப்பொழுது உலக நாடு புதினம் பார்த்துக் கொண்டுதான் இருந்தன. இருந்தும் நாங்கள் இன்று சர்வதேச நாடுகளிடம் கேட்டு நிற்பது எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இந்த 15 வருடங்களாக எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? எங்கு இவர்களை ஒளித்து வைத்திருக்கின்றார்களா? இதைத்தான் நாங்கள் கேட்டு நிற்கின்றோம்.

எங்கள் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுவும் ஒரு ஏமாத்து வித்தையாகவே காணப்படுகின்றது.

ஒவ்வொரு மனித ஆணைக்குழுவும் எங்களுடைய துன்பங்களையும் வேதனைகளையும் அறிந்து செல்வதிலேயே அக்கறைக் காட்டுகின்றனர்.

ஆனால் என்ன நடக்கின்றது என்பதே எமக்குத் தெரியவில்லை. வடக்கு கிழக்கில் மனித உரிமையே கிடையாது.

மனித உரிமை இல்லாத நாட்டில் தான் நாங்கள் இப்பொழுது வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். எங்களுக்கு இங்கு எந்தவிதமான சுதந்திரமும் கிடையாது.

நாங்கள் இப்பொழுது கேட்டு நிற்பது எங்கள் பிள்ளைகள் எங்கே என்பது தான். சர்வதேசம் எங்களுக்கு இதற்கான முடிவைத் தரும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும் என்பது மட்டும் உண்மை. – என தெரிவிக்கப்பட்டது.

# சம்பூர் சமரனின் ‘விடியலைத் தேடி’ நூலின் அறிமுகவிழா திருகோணமலையில் நாளை

(ஏ.எச். ஹஸ்பர்)

எழுத்தாளர் தெ.கரிதரன்(சம்பூர் சமரன்) எழுதிய – கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான – “விடியலைத் தேடி“ எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில், சம்பூரணி தலைமையில் தமிழ் அமுதம் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி.சுதாகரனும், கௌரவ அழைப்பாளர்களாக வை.கமலநாதன் (அதிபர்), திருமதி.சி.இலக்கும் தேவி (மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர்), க.யோகானந்தன் (ஓய்வு நிலை அதிபர்), செ.செந்தூரன் (நிறுவுனர்–செல்லக்குட்டி அருணோதயம்), வ.யோகசந்திரன் (ஒருங்கிணைப்பாளர் – அகரம் கலைக்கூடம்) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்களும் சிறப்பு பிரதியை வை.பரமலிங்கமும் பெறவுள்ளனர்.

நூலுக்கான அறிமுகத்தை எழுத்தாளர் தி.பவித்திரனும், நூல் திறனாய்வைத் திறனாய்வாளர் வ.முரளிதரநும் நிகழ்த்த உள்ளனர்.





# முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருளைக் கடத்தியவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருள் கடத்திய இளைஞரொருவர் புலனாய்வு பிரிவினரால் யாழில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையில் போதைப் பொருளுடன் இளைஞரை கைதுசெய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விஸ்வமடுப் பகுதியிலிருந்து பஸ் மூலம் ஸ்பிறிற் எனும் போதைபொருளை கடத்த முற்பட்ட பொழுது யாழ் நகரில் வைத்து குறித்த இளைஞரை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதன் போது விஸ்வமடு பகிதியைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைக்காக சந்தேக நபரை யாழ் மாவட்ட குற்ற தடுப்பு பிரிவினரிடம் பாரப்படுத்தி உள்ளனர் எனர் தெரிய வருகிறது.

### மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்ட

# 82 கிலோ ஆமை இறைச்சியுடன் இரண்டு பேர் பள்ளமடுவில் கைது





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி கடல் ஆமை இறைச்சிகளுடன் 2 சந்தேக நபர்கள் நேற்று வியாழக்கிழமை மதியம் பள்ளமடு பிரதான வீதியில் வைத்து மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 82 கிலோ கடலாமை இறைச்சி பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மீன்கள் பொதி செய்து கொண்டு செல்லும் போர்வையில் குறித்த கடலாமை பொதி செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையில் இராணுவப் புலனாய்வுத் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பள்ளமடு வீதியில் வைத்து அந்த வாகனத்தை சோதனை செய்தனர். அப்போது இந்தக் கடலாமை இறைச்சிப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு சென்ற இரண்டு நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# நாட்டில் நீர் மின் உற்பத்தி 40 வீதத்தால் அதிகரிப்பு

நாட்டில் தற்போது பெய்துவரும் கனமழையால் நீர் மின் உற்பத்தி சுமார் இருமடங்கு அதிகரித்துள்ளது.

தற்போதைய மழை நிலைமையுடன் நீர் மின் உற்பத்தி 40 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மழையுடனான வானிலை ஆரம்பமாகுவதற்கு முன்னர் நீர் மின் உற்பத்தியானது 20 சதவீதமாகவே காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

39 வீதமாக காணப்பட்ட நீர்த் தேக்கங்களின் நீர் கொள்ளளவு, தற்போது 60 வீதமாக உயர்வடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் மழையுடனான வானிலை நீடிக்கும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

நாட்டில் நிலவும் கடும் காற்று மற்றும் பலத்த மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்தின் சில பகுதிகளிலும் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகுமெனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலத்த மழையுடனான வானிலையால் 20 மாவட்டங்களில் 26 ஆயிரத்து 524 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுவதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு, காலி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலிலுள்ளது.



# யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் காணப்படும் இடங்களில் இவ்வாறு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கரவெட்டி, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நேற்று முதல் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மழையுடனான வானிலையால் ஏற்படக்கூடிய அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைத் தெளிவுபடுத்தும் விசேட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களில் டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டுக்கு உதவி வழங்காத தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையுடன் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 31.05.2024




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாது காப்பு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றி யும் கிடைக்கும் நாள். புத்திசாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக் கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வு களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ் வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவனமாகக் கையாள வேண் டிய கடினமான சூழ்நிலைகள் காணப் படும். இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியா ளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப் பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படு வீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உற வில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கைக் மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று சிறிது பதற்றம் காணப்படும். இதனால் கால் வலி ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக் கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந் துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

இன்று உங்களின் மன உறுதி காரணமாக உங்க ளின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன் படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான நாள்.

பணி தொடர்பான பயணம் காணப் படுகின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாது காப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ் நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியா னம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரண மாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படு வீர்கள். முடிவுகளை விரைந்து எடுப் பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத் தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்து வதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணி யாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந் துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.05.2024



தனுசு

உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.

நல்ல சுறுசுறுப்பு மற்றும் மனதிடம் காரணமாக இன்று உங்களிடம் ஆற்றல் நிரம்பி இருக்கும்.



கும்பம்

இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.



மகரம்

இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலிருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம்.



மீனம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம்.

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.




Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# புகைத்தல் அற்ற உலகை நோக்கி நாம் பயணிப்போம்...!

## இன்று (31) சர்வதேசபுகைத்தல், மது ஒழிப்பு தினமாகும்



நடராஜன் ஹரன்

நமது நாட்டில் பரவி வரும் போதைபொருள் பாவனையை குறைக்கும் முகமாக பல விழிப் புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதோடு இவ் விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் போதைக்கு அடிமையா னவர்கள் அதிலிருந்து விடுபடுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பொதுப்பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் போதை ஒளிப்பு அறிவுரைக்கு அமைய பொலிஸ்மா அதிபரின் மேற் பார்வையின் கீழ் யுக்திய வேலைத் திட்டத்துக்கு மக்கள் ஒத்துழைப்புடன் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டமை வரவேற்கத் தக்கது.

அவ்வகையில் இலங்கை யில் சிகரெட் புகைப்பிடிப்பதால் மது பாவனையால் நாளொன் றிற்கு 60 பேர் மரணிக்கின்றனர். இதனால் வருடமொன்றிற்கு இதனால் மரணிப்போரின் எண் ணிக்கை சராசரியாக 20,000 ஆகும்.



சர்வதேச ரீதியில் வருடாந்தம் சுமார் 60 லட்சம் பேர் புகைப் பிடித்தலால் உயிரிழக்கின்ற னர். மேலும் புகைத்தல் காரண மின்றி ஆனால் புகைப்பிடிப் பவர்களை சூழவுள்ள இரண் டாம் நிலை புகைத்தல் காரண மாக வருடமொன்றுக்கு 06 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.

### கொல்லும் புகையிலை

இன்றைய நவீன உலகில் இலத்திரனியல் தாக்கம் பல் கிப்பெருகி இன்று இது புது புரட்சியாக புகையிலையில் வந் துள்ளது அதுவும் விதவிதமான நறுமணங்களில் புதிய உத்தியை பாவித்து விற்பனை புரள்வு அதி கரிக்கப்பாட்டிருப்பது கவலை தரும் விடயமே. இதனை உணர்த்த பல அபிவிருத்தி அடைந்த இங்கிலாந்து போன்ற நாடுகளில் இதற்குத் தடையும் விதித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

அமெரிக்காவில் கிறிஸ்து வுக்கு முற்பட்ட காலப்பகுதி யிலேயே புகையிலை பயிரிட ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக் கர்கள் காயங்களை சுத்தமாக்கும் தொற்று நீக்கியதாகவும் வலி நிவாரணியாகவும் புகையி லையை பயன்படுத்தினர். வட அமெரிக்காவில் பணம் உழைக் கும் பயிராக புகையிலை இருந் துள்ளது.

1847 ஆம் ஆண்டு பிலிப் மொரிஸ் என்பவரே முதன் முதலாக புகையிலையைப் பயன்படுத்தி சிகரெட்டினைத் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்திருந்தார். எனினும் சிகரெட் பயன்பாடு என்பது ஆரம்ப காலங்களில் இராணுவ வீரர்களிடமும் பாதுகாப்புப் படை யினரிடமே காணப்பட்டது.

1953 களில் சிகரட், புகை யிலை பாவனையால் பலவகை யான புற்றுநோய் ஏற்படுகின்றது என டாக்டர் எமல் எல் வைன்டஸ் கண்டுபிடித்தார்.

இதனைத் தொடர்ந்து 1964 களில் அமெரிக்க அரசு புகை பிடிப்பதால் சுகாதாரத்திற்கு கேடு என்னும் நோக்கில் அவர்க ளுக்கு எதிராகவும் விற்ப னைக்கு எதிராகவும் சட்டம் உரு வாக்கியது.

மனிதனுக்கு மரணத்தைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணி களில் புகையிலை இரண்டாம் நிலையிலுள்ளது. இதனா லேயே புகையிலை பாவிப்பு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக உலக சுகாதார அமைப்பு 1987 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதியை உலக புகையிலை எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத்தி யுள்ளது.

இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆம் திகதியை உலக புகையிலை எதிர்ப்புத் தினமாக ஒவ்வொரு கருப் பொருளை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு நாளாக அனுஷ் டித்து வருகின்றன.

புகைத்தல் புகை பிடிப்பவரை விட அந்தச் சூழலில் இருக்கும் ஏனையவர்களையே அதிகளவு பாதிக்கச் செய்கின்றது. புகைப் பவர்கள் தமது ஆயுள் காலம் முடிவதற்கு முன்பே தமது உயிரைஅழித்துக் கொள்கின்ற னர். இதேவேளை தன் உயிரை அழிப்பதற்கே இந்த உலகில் அனுமதி இல்லாத போது தன் சுயநலத்துக்காக அடுத்தவர் உயிர்களின் அழிவுக்கு மற்ற வர்கள் காரணமாக இருப்பதை எவ்வாறு அனுமதிக்க முடியும்?

புகைத்தல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டு உலகில் நிமிடத்துக்கு 6 பேர் மரணிக்கின்றனர் என்று சர்வ தேச சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

20 ஆம் நூற்றாண்டில் 100 மில்லியன் பேரும் 21 ஆம் நூற் றாண்டில் இதுவரை ஒரு பில்லி யன் பேர் புகைத்தல் தொடர்பான நோய்களால் இறந்துள்ளனர் எனவும் ஆய்வறிக்கை ஒன்ற தெரிவிக்கின்றது. இது தொடரு மானால் 2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8 மில்லியன் பேர் வரை வருடாந்தம் உலகில் மரணமடையலாம் என எதிர்வு கூறப்படுகிறது.

புகைக்கும் போது வெளிவரும் புகையில் 400 இற்கும் அதிக மான நச்சு இரசாயனப் பொருள் கள் காணப்படுகின்றன. இவற் றில் 50 வீதமானவை சுவாசப் பற்றுநோயை ஏற்படுத்துபவை யாகவுள்ளன. அத்துடன் இப் புகையைச் சுவாசிக்கும் சிறு குழந்தைகளின் எண்ணங்களில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று ஆஸ்திரேலியாவின் சிட்னி பல் கலைக்கழகம் மற்றும் நைட்டிங் காம் பல்கலைக்கழகங்களின் ஆய்வு முடிவுகள் தெரிவிக் கின்றன.

புகையியை சுவாசிப்பதால் இதயம், நுரையீரல் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்ற அதே வேளை நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, உடல் உறுப்புகளில் பாதிப்பு, பல், உதடுகளின் நிறம்

தொடர்ச்சி ▼

# புகைத்தல் அற்ற உலகை நோக்கி நாம் பயணிப்போம்...!

தொடர்ச்சி ▲

மாறுதல், இருமல் என புதுப்புது நோய்கள் புகைப்பவர்களின் உடலினை ஆக்கிரமித்து கொள்கின்றன. இதனால் புகைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது வாழ்நாளினை வைத்தியசாலைகளிலும் மருந்துகளுடனும் கழிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

புகையிலையை பல விதங்களில் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக வெற்றிலையுடன் சேர்த்து உண்ணல், மூக்குப் பொடியாக பயன்படுத்தல், குழாய்களைப் பாவித்து புகையை உறிஞ்சுதல், இதனை விட பீடி, சுருட்டு, சிகரெட் என பல முறைகளில் புகையிலையை பயன்படுத்துகின்றனர்.

புகைப்பிடிப்பதால் சில வேளைகளில் உடலின் அல்லது மனதின் உபாதைகளுக்கு நிவாரணம் கிடைக்கலாம். ஆனால், இவற்றினால் இறுதியில் கிடைக்கும் பிரதிகூலங்களும் வேதனைகளும் செல்லிலடங்காதவை.

புகையை உள் இழுக்கும் போது புகையிலுள்ள நிக்கோர்டின் என்னும் இரசாயனப் பொருள் மூளையைச் சென்றடைகின்றது. ஒவ்வொரு முறையும் இழுக்கும் போதும் அந்த இரசாயனப் பொருள் மூளைக்கு செல்கின்றது. அத்துடன் இந்த இரசாயன நச்சுப் பொருளுடன் 700 வகையான வேறு இரசாயனக் கூட்டுப் பொருள்களும் செல்கின்றன.

மூளையின் மனநிலை மாற்றுக் கலங்களுக்கு நிக்கோர்டின் உட்பட இரசாயனக் கூட்டுப் பொருட்கள் செல்வதால் புகைபிடிப்பவர்களுக்கு ஒரு வகை மாயையைத் தோற்றுவிக்கின்றனர். சில மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பவர்கள் இந்த மாயையை ஒரு சிறந்த தீர்வாக எண்ணுகின்றனர். எனவே புகைபிடித்தலை ஒரு பழக்கமாக ஏற்றுக்கொள்ள முனைகின்றனர்.

## மன அழுத்தங்களுக்கு புகைத்தல் தீர்வாகுமா?

இலங்கை இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை அநேகமான ஆண்கள் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ அல்லது பொது இடங்களிலோ ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அதனால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கும் தீர்வாகவே புகைபிடிப்பதாகக் காரணம் சொல்வர்கள். எந்தவொரு பிரச்சினைகளையும் பேசியோ, ஆராய்ந்தோ, சிந்தித்தோ முடிவெடுக்காது புகைபிடித்தலைக் காரணம் சொல்வது மடமையாகும்.

இலங்கையிலேயே புகைபிடிப்பதற்காக பல காரணங்களை சொல்கின்றனர். மகிழ்ச்சிக்காகவென 22 வீதமானோரும் நண்பர்களுடனும் பொழுது போக்கவென 8.2 வீதமானோரும் புகைபழகத்திலிருந்து விடுபட முடியாத காரணத்தினால் 17 வீதமானோரும் தனிமையைப் போக்க 10.5 வீதமானோரும் பரீட்சித்துப் பார்க்கவென 8.7 வீத மானோரும் நண்பர்களின் அழுத்தங்களுக்காக 10 வீதமானோரும் பிரச்சினைகளுக்காக 15 வீதமானோரும் தாம் புகைபிடிப்பதற்கான காரணமாகச் சொல்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள்களின் விலையேற்றத்தால் திணறுகின்ற பொது மக்கள் சிகரெட், சுருட்டு, மது போன்றவற்றின் விலையினை எத்தனை சதவீதத்தினாலும் அரசு உயர்த்தினாலும் எந்த வித ஆர்ப்பாட்டமும் செய்யாது அதிக பணம் கொடுத்த வாங்கி உபயோகிக்கின்றனர். எனவே தான் அரசு எந்தவித அச்சமோ, தயக்கமோ இன்றி அடிக்கடி இத்தகைய பொருட்களின் விலையினை அதிகரித்து வருகின்றது. இந்த விலையேற்றத்தால் குடும்பப் பெண்களும் குழந்தைகளும் உறவினர்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

200 குடும்பங்கள் சிகரெட் வாங்க மாதாந்தம் செலவு செய்யும் தொகை 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவாகும். ஒரு நாளைக்க 4101 மில்லியன் சிகரெட்டுகள் விற்கப்படுகின்றன.

இலங்கை மட்டுமல்லாது உலக நாடுகள் பல சிகரெட் விற்பனை மூலமே அதிகளவு வருமான வரியை ஈட்டுகின்றன. இலங்கை அரசு சிகரெட் மூலம் 12 வீத வருமானத்தினைப் பெற்று வருகின்றது. புகைபிடிப்பதற்காக 5800 கோடி ரூபாவினை வருடமொன்றுக்கு செலவிடுகின்றனர்.

அதேவேளை புகை தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்க சுகாதார அமைச்சு 22 வீதம் செலவிடுகின்றது. புகைபிடிப்பவர்களில் 60 பேர் உயிரிழக்கின்ற அதேவேளை 60 பேர் புதிதாக புகைபிடிக்கப் பழகுகின்றனர்.

புகைபிடித்தலை ஊக்குவிக்க பிரித்தானியா, அமெரிக்கா புகையிலை கம்பனிகள் கோடி கோடியாக அமைதியாக இருந்து கொண்டு இலாபம் உழைக்கின்றனர். ஆனால், இவற்றை உணராத வறிய, சாதாரண குடும்பத்தவர்கள் அற்ப மகிழ்ச்சிக்காக அவர்களுடைய உடலையும் கெடுத்து குடும்ப மகிழ்ச்சியையும் சீரழித்து பணத்தினையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றனர்.

2010 ஆம் ஆண்டு விட கிழக்கில் மட்டும் 5.1 பில்லியன் ரூபாவினை அரசு புகையிலைப் பொருட்கள் மூலமாக வருமானமாகப் பெற்றுள்ளது. எனவே தான் புகைப்பிடித்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த அரசும் அரசு சாராத நிறுவனங்களும் சமூக நிறுவனங்களும் முன்வர வேண்டும். இதன் ஒரு முயற்சியாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்திப் பிரிவு இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை புகையிலை எதிர்ப்பு வாரங்களாக பிரகடனப்படுத்தியுள்ளது.

பொது இடங்களில் புகைபிடித்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றினை எவரும் கருத்தில் கொள்வதில்லை. எனவே இத்தகையோரைக் கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்க பொலிஸார் முன்வர வேண்டும். அதே போல 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு இவற்றை விற்க தடையுள்ள போது கடை உரிமையாளர்கள் இரகசியமாக விற்று பணம் சம்பாதிக்கின்றனர்.

அதேபோல் பொது இடங்களிலோ, ஊடகங்களிலோ சிகரெட், புகையிலை தொடர்பான விளம்பரங்கள் செய்வதும் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

நாம் பொருள்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, முடிவு திகதி, பலன் என ஒவ்வொன்றையும் பார்த்தே வாங்குகின்றோம். ஆனால், சிகரெட் பெட்டிகளிலோ, மதுசாரப் போத்தல்களிலோ பெரிய எழுத்துகளினால் எழுதப்பட்டிருக்கும் உடலுக்கு தீங்கானவை என்னும் வாசகத்தை மட்டும் வாசிக்கவோ பின்பற்றவோ தவறிவிடுகின்றோம்.

1988 ஆம் ஆண்டு பின்லாந்தும் 1994 ஆம் ஆண்டு பிரான்ஸூம் புகைத்தல் தொடர்பான விளம்பரங்களை முற்றாகத் தடை செய்துவிட்டன. அதே போல எமது நாட்டு ஊடகங்களும் வர்த்தக அமைப்புகளும் இவற்றைத் தடை செய்ய முன்வர வேண்டும். புகைத்தல் அற்ற உலகை நோக்கி நாம் பயணிப்போம் .

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**